**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 01 - 2018**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 03 இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 யூன் 28 ஆம் திகதிய 2947- எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவு மற்றும் 2948- எஸ்ஆர்ஐ-(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு ன்பவற்றுடன் சேர்த்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் 2013 யூன் 28 ஆம் திகதிய செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.10 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாவிருந்த தற்போதைய நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் வசிப்பவர்களிற்கான நகர சூழல் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. நிகழ்ச்சித்திட்டமானது (அ) கொழும்பு நகரத்தில் நீர் வழங்கல் முறைமை புனரமைத்து வரிவாக்குதல் மற்றும் வருமானமற்ற தண்ணீரைக் குறைத்தல், (ஆ) கொழும்பு பெரும்பாகத்தில் கழிவு நீர் அகற்றல் சேவையை முன்னேற்றுதல், (இ) சேவை வழங்குநர்கள் மற்றும் முகாமையின் நிறுவனரீதியான கட்டமைப்பு மற்றும் இயலளவை வலுப்படுத்தல், (ஈ) முதலீட்டு செயற்திட்டங்களை அமுலாக்கல் என்பவற்றினை எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 12 கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 14,784 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 112 மில்லியனாகும் அதில் ரூபா 11,088 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 84 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி தொகை ரூபா 3,696 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 28 மில்லியன் அல்லது 25 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 யூன் 25 இல் தொடங்கியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதி 2019 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்

என்னுடைய அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும்

பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்க ஏற்றவாறு நிகழ்ச்சித்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு நிகழ்ச்சித்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை

உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| அ) | கடனளிக்கும் முகவரால் 2018 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்ட ரூபா 329.85 மிலிலியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.13 மில்லியன் கூட்டுத்தொகையான வட்டிகள் மற்றும் கடப்பாட்டு கட்டணங்கள் கணக்குகளற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதிகள், வட்டி மற்றும் கடப்பாட்டு கட்டணங்களின் குறைத்தக் கூறல் | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதிப் பிரிவின் அறிவுறுத்தல்களிற்கு அமைய வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் புத்தகங்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவே, வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் உரிய செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களின் கணக்குகளிற்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப் பட்டிருநதன. | மீளாய்வாண்டு இறுதியில் பயன்படுத்திய கடன் தொகையை காட்டுவதற்கு இயலக்கூடியவாறு கிரயங்கள் பிரிக்கப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது விசேட (டொலர்) கணக்கிற்கு செய்யப்பட்ட ரூபா 84.59 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 499,712 தொகையான மீளளிப்புகள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. மேலும் 2018 செப்தெம்பர் மாதத்தில் கடனளிக்கும் முகவரால் ரூபா 7.46 மில்லியன் தொகையான நேரடிக் கொடுப்பனவுகள் கணக்குகளிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. மேலும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 17.87 மில்லியன் கூட்டுத் தொகையான விசேட | நடைபெறும் வேலைகளின் குறைத்துக்கூறல் மற்றும் ஒவ்வொரு மீதிகளும் அதிகரித்தக் கூறல் | கணக்கீட்டு தவறுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விசேட (டொலர்) கணக்கிற்கான மீளெடுப்புகள் மற்றும் மீளளிப்பகள் கால ரீதியாக பதியப்பட வேண்டும். |

(டொலர்) கணக்கு மீதிகள் இலங்கை மத்திய வங்கியால் உறுதிப்படுத்தப்பட்ட ரூபா 95 மில்லியன் கூட்டுத்தொகையுடன் ஒத்திருக்கவில்லை.

## 2.2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| ஒப்பந்த உடன்படிக்கையின் பொது நிபந்தனைகள் | வேலைத்தள பொறியியலாளரால் சான்றுபடுத்திய விலைப்பட்டியல்கள் 56 வேலை நாட்களிற்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டுமென வேண்டப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், நிகழ்ச்சித்திட்டமானது 58 நாட்கள் முதல் 328 நாட்கள் வரையான வீச்சிலான கால தாமதத்துடன் ரூபா 1,956.50 மில்லியன் மற்றும் ஐ.அ.டொர் 5.99 மில்லியன் பெறுமதியான விலைப்பட்டியல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் இதன் விளைவால் ரூபா 18.46 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 43,316.53 தொகையான நிதிக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிக கட்டணங்கள் ஏற்படக்கூடும் | ஒப்பந்தகாரருடைய விலைப் பட்டியல்கள் தீர்ப்பனவு செய்வதற்கு உரிய அமைச்சிடமிருந்து நிதிகள் பெறுவதில் தாமதங்கள் இருந்தன. | உரிய திகதிகளில் விலைப் பட்டியல்களை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரியின் உடன்படிக்கையுடன் வினைத்திறனான பொறிமுறை தாபிப்பதற்கான தேவை |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்**

| | நடவடிக்கை | எதிர்பாரக்கப்பட்ட இலக்கு | 2018 திசெம்பர் 31 இல் அடையப்பட்ட இலக்கு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | கொழும்பு நகரத்தின் வடக்குப் பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்காக முறைமை | | | செயற்திட்டத்தின் காலப்பகுதி நீடிக்கும் சாத்தியம் மற்றும் செயற்பாட்டு கிரயம் அதிகரிக்கம் சாத்தியம் | கருத்து தெரிவிக்கப்படவில்லை | வேலைகளை நிறைவெற்றுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வெண்டியதுடன் உரிய அமைச்சு மற்றும் அமுலாக்கல் முகவரால் ஒழுங்காக நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் மீதான முன்னெற்றத்தை கண்காணிக்க வேண்டிய தேவை. |
| | - குழாய்கள் பொருத்துதல் | 173,737 மீற்றர் | 120,042 மீற்றர் | | | |
| | - தண்ணீர் குழாய் இணைப்புகள் / மாற்றங்கள் | 40,262 வீடுகள் | 11,272 வீடுகள் | | | |
| | - மாவட்ட மீற்றிரிடப்பட்ட பகுதிகளின் தாபிப்பு | 16 எண்ணிக்கைகள் | 05 எண்ணிக்கைகள் | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஆ) | கொழும்பு நகரத்தின் கிழக்குப் பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்காக முறைமை | | | | | |
| | - குழாய்கள் பொருத்துதல் | 189,972 மீற்றர்கள் | 79,767 மீற்றர்கள் | | | |
| | - தண்ணீர் குழாய் இணைப்புகள் / மாற்றங்கள் | 32,349 வீடுகள் | 3,107 வீடுகள் | | | |
| | - மாவட்ட மீற்றிரிடப்பட்ட பகுதிகளின் தாபிப்பு | 21 எண்ணிக்கைகள் | 03 எண்ணிக்கைகள் | | | |
| (இ) | மால்காகந்த கட்டிட நிர்மாணம் | 97 சதவீதம் | 70 சதவீதம் | செயற்திட்டத்தின் காலப்பகுதி நீடிப்பதற்கும் 2019 இல் கிரயம் அதிகரிப்பதற்கும் சாத்தியம் | கருத்து தெரிவிக்கப்படவில்லை | நிகழ்ச்சித்திட்ட காலப் பகுதிக்குள் வேலைகளை நிறைவெற்றுவதற்கும் பூர்த்தியாக்குவதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| கொழும்பு நகரத்தின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்காக முறைமை புனரமைப்பிற்காக 2014 ஒக்தோபர் 30 இல் மற்றும் 2015 மார்ச் 12 இல் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் மீதான பௌதீக முற்னேற்றம் அகழ்தல் முறை, கையால் மேற்கொள்ளல் வேலைகள் மற்ம் இரவு வேலைகளிற்காக அனுமதி போன்றவற்றிற்கு பதிலாக திறந்த அகழ்வு முறை | இதன்படி ஒப்பந்தங்களின் கிரயம் அதிகரிக்கும் சாத்தியம் | கருத்து தெரிவிக்கப்படவில்லை | நிகழ்ச்சித்திட்ட நிறைவெற்றல் மற்றும் அமுலாக்கல் முகவர்களால் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான வேலைகளை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |

பிரயோகிப்பதற்கான செயற்திட்டத்தின் தீர்மானங்கள் காரணமாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெதுவான முன்னேற்றத்தைக் காட்டுகன்றது.

### 3.3 முரணான நடவடிக்கைகள்

| இல. | கணக்காய்வு அவதானிப்புகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்திட்ட நிர்வாக கைநூலின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் கொழும்பு மேல் பிராந்திய ஆதார செவை நிலையத்தின் வருமானமற்ற தண்ணீர் பிரிவுக்கு ஒதுக்குவதற்கு திட்டமிடப்பட்டது எவ்வாறாயினும், ரூபா 17.97 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 02 மோட்டார் வாகனங்கள் சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள பிராந்திய ஆதார செவை நிலையங்களிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் அடையப் பட்டிருக்கவவில்லை | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை | விதிக்கப்பட்டுள்ள குறிப்பிடப்பட்ட நோக்கங்களிற்காக செத்துக்களின் பயன்படுத்தலின் தேவை |
| (ஆ) | செயற்திட்டின் நோக்கங்களிற்கு முரணாக, மீளாய்வாண்டின் போது நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சின் ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் படிகளாக முறையே ரூபா 2.12 மிலலியன் மற்றும் ரூபா 1.3 மில்லியன் தொகைகள் செலுத்தப்பட்டிருந்தது. | | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை | உரிய அமைச்சிடமிருந்து கிரயத்தை மீள்நிதியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |